# Spitex – பராமரிப்பு மற்றும் வீட்டில் ஆதரவு



## வீட்டில் வீட்டுவேலைகளின் போது அல்லது பராமரிப்புக்கு உதவி தேவைப்படுகின்றதா?

இதற்கென்று கற்ற நிபுணர் ஒருவர் எல்லா வயதினருக்கும் தேவையான பராமரிப்பு உதவிகளை வழங்குகின்றனர் ஸ்பித்தெக்ஸ் (Spitex) உறவினர்களின் பாரத்தைக் குறைக்கின்றது.

## ஸ்பித்தெக்ஸ் என்ன செய்யும்?

ஸ்பிடெக்ஸிடம் உதாரணமாக உடல் மற்றும் மன ரீதியான நோய்கள், தள்ளாமை, விபத்தின் பின், கர்ப்பகாலச்சிக்கல்கள் அத்துடன் மகப்பேற்றின் பின்பான சிக்கல்களுக்காக நீங்கள் சேவையைக் கோரலாம்.

### ஸ்பித்தெக்ஸின் நன்மைகள் பின்வருமாறு: வீட்டில் மருத்துவ பராமரிப்பு:

- சலுகை தேவையா என்பதை தெளிவு படுத்துதல்
- வாய்ப்பின் விளக்கமும் ஆலோசனையும்
- உடற்பராமரிப்பின்போது உதவி
- தனிப்பட இயங்குவதற்கான உதவி (எழும்புதல் மற்றும் படுக்கைக்குச் செல்லுதல்)
- தயார்படுத்துதல் மருந்து கொடுத்தல்
- மருத்துவரீதியாகச் சரிபார்த்தல் உதாரணமாக இரத்த சர்க்கரை மற்றும் இரத்த அழுத்தம் போன்றவற்றை அளத்தல்
- வலி சிகிச்சை
- காயங்களைப்பராமரித்தல்
- இறப்பின் போது துணையிருத்தல்

### வீட்டுவேலைகளின்போது உதவி:

- பொருட்கள் வாங்குவதற்கு ஆதரவளித்தல்
- சமைத்தல்
- வீட்டைத்துப்பரவு செய்தல்
- உடுப்புகளைக்கழுவுதல்

### ஸ்பித்தெக்ஸ் பிராந்தியங்களைப்பொறுத்து:

- உணவுநேரசேவை
- பிரயாணச்சேவை (மருத்துவர் மற்றும் பொருட்கள் வாங்குதல்)
- உதவி உபகரணங்களை வாடகைக்கு கொடுத்தல் (உதாரணமாக – கைத்தடி, சுவாச உதவி உபகரணங்கள் அல்லது சக்கரநாற்காலிகள்).

மேலதிகமான உதாரணமாக, மனநோயாளருக்கான பராமரிப்பு, புற்றுநோயின்போதான பராமரிப்பு அல்லது சுகப்படுத்த முடியாத நோய்களின் போதான பராமரிப்பு சேவைகளையும் பெரிய நகரங்களில் வழங்குகின்றன.

## கிறங்கன் காப்புறுதி எவற்றைச் செலுத்தும்?

அடிப்படையான கிறங்கன் காப்புறுதி பராமரிப்புக்குத் தேவைகளுக்கான கட்டணத்தைச் செலுத்தும். அதற்கு மருத்துவரின் ஸ்பித்தெக்ஸ் பரிந்துரை செய்யப்பட்ட கடிதம் தேவை.

## கிறங்கன் காப்புறுதி எவற்றைச் செலுத்தாது?

அடிப்படையான கிறங்கன் காப்புறுதி வீட்டுவேலைக-ளின்போது உதவி- தேவைகளுக்கான கட்டணத்தைச் செலுத்தாது.
இதற்கென்று மேலதிக கிறங்கன் காப்புறுதி செய்ய வேண்டும். அதைப்பற்றி உங்கள் கிறங்கன் காப்புறுதியிடம் கேட்டறியு-ங்கள்.
மேலதிக கிறங்கன் காப்புறுதி உங்களிடம் இருந்தால் வீட்டு பராமரிப்புகளின் போது தேவைகளுக்கான கட்டணத்தை, தங்கள் நகராட்சி ஒரு பகுதியையும் கிறங்கன் காப்புறுதி ஒரு பகுதியையும் செலுத்தும்.

## எவற்றை வாடிக்கையாளர் தாமே செலுத்த வேண்டும்?

- கிறங்கன் காப்புறுதி வருடச்சந்தாவில் குறிப்பிட்ட (பகுதி) தொகை
- பராமரிப்புத் தொகையின் 10% தொகை (கிறங்கன் காப்புறுதி)
- பராமரிப்புத் தொகையில் நோயாளரின் பங்கு (இது நகராட்சியைப் பொறுத்தது)
- வீட்டுவேலைகளின்போது உதவிக்கான கட்டணம்

**ஸ்பித்தெக்ஸ் நிறுவனத்தை நீங்கள் ஒவ்வொரு நகரத்திலும் சுவிஸில் காணலாம்.**

- www.spitex.ch/Spitex in your Region
- 0842 80 40 20 (8 centimes/minute)
- உங்களுடைய வசிப்பிடமுள்ள நகராட்சி

With professional and financial support of migesplus

Schweizerisches Rotes Kreuz
migesplus.ch

www.migesplus.ch
Health information in various languages

Überall für alle
SPITEX
Schweiz